## கற்களால் செய்யப்பட்ட கைவினைப் பொருள்கள்– கற்சிற்பங்கள்

வரலாற்றிலேயே தென்னிந்தியாவில் தான் கற்களில் செதுக்கிய வேலைப்பாடுகள் ஓர் உயர்ந்த இடத்தைப் பெற்று திகழ்கின்றன. உதாரணமாக


சோழர்காலக் கற்கோயில்கள் (தஞ்சாவூர்)


பல்லவர் காலச் சிற்பங்கள் (மகாபலிபுரம்)

கருங்கல்லைச் செதுக்கிச் செய்யும் கைவேலைகள் இந்நாளில் மகாபலிபுரத்திலும் காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சுற்றிலும் நடைபெறுகின்றன. மாக்கல்லில் செதுக்கிச் செய்யும் பணி புதுச்சேரி, கடலூர் மற்றும் சேலம் பகுதிகளில் நடைபெறுகின்றது.

## மரவேலைப்பாடுகள்

மரமும் கைவேலைப் பாட்டிற்குப் பயன்பட்டுவருகிறது. மரத்துண்டுகளை உளிகளால் செதுக்கி பல்வேறு வகையான வடிவங்களை அமைப்பர். இவை மரச்சிற்பங்கள் எனப்படும். இக்கலை மிகவும் தொன்மையானதாகும்.



## தஞ்சாவூர்க் கலை

தஞ்சாவூர் ஓவியம் தங்கத்தகடுகளும் அபூர்வக்கற்களும் மற்றும் அடிப்படை நிறங்களுடன், சேர்ந்து செய்யப்படும் ஒரு கைவினை ஓவியம் ஆகும்.





நுணுக்கமான வேலைப்பாடுகள் கொண்ட காஞ்சிபுரம் பட்டு, பருத்தி மற்றும் பல்வேறு துணிகளுக்குப் புகழ் பெற்றது தமிழ்நாடு. இங்கு ஒவ்வொரு நெசவாளரின் வீட்டிலும் தறி உள்ளது. அவர்கள் ஒரு பட்டுப்புடவை தயாரிப்பதற்கு 30 முதல் 40 நாள்கள் வரை எடுத்துக்கொள்கிறார்கள்.





## பருத்தித்துணிகள்

கோவை, ஆரணி, தஞ்சை, ஈரோடு, கரூர், மதுரை போன்ற நகரங்கள் பருத்தி நெசவிற்குப் பெயர் போனவை. பருத்தி ஆடைகள் கைத்தறி நெசவினால் தயாரிக்கப்படுகின்றன.







சுருங்கக் கூறின் தமிழகத்தில் கைத்தொழில்கள் வளர்ந்து வருகின்றன. இன்று இவற்றின் வளர்ச்சி தொழில்நுட்பத்திற்கேற்ப மாறி வருகின்றன. பாலியஸ்டரைப் பருத்தி நூலோடு இணைத்து பாலிகாட் புடவைகள உருவாக்குகின்றனர். உங்களைச் சுற்றிலும் இருக்கும் கைவினைப் பொருள்களைப் பற்றி தெரிந்து கொள்ளுங்கள்! கற்றுக் கொள்ளுங்கள்.



## மதிப்பீடு


### I. கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக

1. கைவினைப் பொருள்கள் பெரும்பாலானவை எவற்றால் செய்யப்படுகின்றன ?
2. பனைமரத்திலிருந்து – பனை ஓலையிலிருந்து தயாரிக்கப்படும் பொருள்கள் யாவை ?
3. தேங்காய் நாரை உபயோகித்து செய்யக் கூடியவை இரண்டு கூறு ?
4. மூங்கில், பிரம்பு மற்றும் புற்களால் செய்யப்பட்ட பொருள்கள் 5 கூறுக.



### II. பொருத்துக

| | | |
|---|---|---|
| 1. சிவப்பு மற்றும் கறுப்பு கலந்த மட்பாண்டம் | – | மகாபலிபுரம் |
| 2. பருத்தி ஆலைகள் | – | வேலூர் |
| 3. மாக்கல் வேலைப்பாடு | – | ஆரணி |
| 4. கடற்கோயில்கள் | – | சேலம் |



### III. நிரப்புக

1. சணலால் செய்யப்படும் கைவினைப் பொருள் ____________.
2. மூங்கிலிலிருந்து செய்யப்படும் இசைக் கருவி ____________.
3. கோரைப் புல்லிலிருந்து ____________ தயாரிக்கப்படுகிறது.
4. ____________ சோழர்காலக் கோயில்களில் காணப்படுகின்றன.

### IV. நான் யார் ? கண்டுபிடி.

1. பட்டு நகரம் என அழைப்பர். கா____________
2. பருத்தி ஆடைகள் அதிகமாக நெய்யப்படும் நகரம். கோ____________
3. பாய் என்றவுடன் நினைவிற்கு வருவேன். ப____________
4. தலையாட்டிப் பொம்மைக்குப் பெயர்பெற்ற இடம். த____________

### ஆசிரியருக்கு...

மாணவர்களைத் தமிழகத்தின் அரிய பொருளான கைத்தறி மற்றும் கைவினைப் பொருள்களை அறியும்படி செய்யவும். மாணவர்களைப் பல புதிய பொருள்களைச் சேகரிக்கச் செய்து அவை எவ்வாறு தயாரிக்கப்பட்டது என்பதைக் குறித்து பேசச் செய்தல்.


## திரும்பிப் பார்ப்போமா ?

படித்த ஐந்து பாடங்களில் நினைவில் உள்ளவற்றை எழுதுவோம்.

1



2



3



4



5





## பாராட்டுச் சான்றிதழ்

நான்காம் வகுப்பு பாடப்புத்தகத்தில் உள்ளஅனைத்துப் பாடங்களையும் மகிழ்ச்சியுடன் வெற்றிகரமாகப் படித்து முடித்ததற்கு வாழ்த்துகள்.

புகைப்படம்

மாணவர் பெயர்:

பள்ளியின் பெயர்:

ஆசிரியர் கையொப்பம்



## ‘என்னால் முடியும், நான் செய்தேன்’

*( 'I can, I did' )*

மாணவர் கற்றல் செயல்பாடுகள் பதிவேடு

பாடம் :

| வ. எண் | நாள் | பாட எண் | பாடத்தலைப்பு | செயல்பாடுகள் | குறிப்புரை |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |